**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S. 95/2014**

**நாள்.24.02.2026**

**பி.வா.சா.1-இந்திராணி**

**த/பெ - மெய்யன்பூசாரி**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் இந்த வழக்கில் 8 ம் பிரதிவாதியாக உள்ளேன்.

2. நானும், 1 ம் வாதி வெள்ளையம்மாளும் உறவினர்கள் என்றால் சரிதான். 1 ம் வாதி எனக்கு அத்தை உறவுமுறை. 1 ம் வாதி வெள்ளையம்மாளின் மாமனார் தான் பொன்னுச்சாமி அம்பலம் என்றால் சரிதான். பொன்னுச்சாமி அம்பலம் 1966 ல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. பொன்னுச்சாமி அம்பலம் இறந்து சுமார் 60 வருடங்கள் இருக்கும் என்றால் தெரியாது.

3. தாவா வழக்கு சொத்து ஒரு சர்வே எண்ணில் 5 ஏக்கர் 14 செண்ட் உள்ளது. தாவா சொத்தும், வேறு சொத்துகளும் சேர்த்து மொத்தம் 13 ஏக்கர் 48 செண்ட் நிலம் இருந்தது என்றால் இருந்தது. ஆனால் தற்போது இல்லை.

4. மேற்படி 13 ஏக்கர் 48 செண்ட் நிலத்தை பொன்னுச்சாமி அம்பலம், வீரமலை அம்பலம், கருப்பையா அம்பலம் ஆகியோர் தங்களுக்குள் பாகவிஸ்தி கொண்டனர் என்றால் சரியல்ல, அவர்களோடு நான்கு பங்காளிகளும் உள்ளனர்.

5. மேற்படி 13 ஏக்கர் 48 செண்ட் நிலத்தை பொன்னுச்சாமியும் அவரது சகோதரர்களும் பாகபிரிவினை செய்து கொண்டதில் பொன்னுச்சாமி அம்பலத்திற்கு 4 ஏக்கர் 49 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. 1953 ம் ஆண்டு பொன்னுச்சாமி அம்பலம் வீரமலை அம்பலம் வகையறாவிடமிருந்து 1 ஏக்கர் 75 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால்

சரிதான், ஆனால் வீரமலை அம்பலத்தின் தந்தை பெயரும் பொன்னுச்சாமி, வீரமலை, பெரியசாமி, பெரியசாமியின் மைனர் மகன் கருப்பசாமி ஆகியோர் சேர்ந்து பொன்னுச்சாமி அம்பலத்திற்கு கிரையம் செய்துள்ளனர்.

7. 04.09.1963 ம் தேதி மூத்த மருமகனான மெய்யன் அம்பலத்திற்கு பொன்னுச்சாமி அம்பலம் கிரையம் பெற்ற சொத்தை ஈடு கடனாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. தெய்வானை பொன்னுச்சாமி அம்பலத்தின் மூத்த மகள் என்றால் சரிதான். தெய்வானயின் கணவர் தான் மெய்யன் அம்பலம் என்றால் சரிதான்.

9. 04.09.1963 ம் தேதி மெய்யன் அம்பலத்திற்கு பொன்னுச்சாமி அம்பலம் பெற்ற கிரைய சொத்தை ஈடு வைத்து திருப்ப முடியாததால் 09.01.1965 ம் தேதியில் மேற்கண்ட சொத்தை தெய்வானை அம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான்.

10. பொன்னுச்சாமி அம்பலத்தின் மனைவி பாப்பம்மாள். அவர்களுடைய மகன் சங்கர், அவர்களுடைய பெண் மக்கள் தெய்வானை, கன்னியம்மாள், தனலட்சுமி ஆகியோர் வாரிசுகள்.

11. 25.05.1969 ம் தேதியில் பொன்னுச்சாமியின் ஆண், பெண் வாரிசுகள் சேர்ந்து பாப்பம்மாளுக்கு 4 ஏக்கர் 49 செண்ட் நிலத்தில் இருந்து 2 ஏக்கர் நிலத்தை தானசெட்டில்மெண்டாக எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் அந்த ஆவணத்திற்கு கட்டுப்பட்ட சொத்தை பாப்பம்மாள் உயிருடன் இருக்கும் காலம் வரை அனுபவித்து கொள்ளலாம் என்றும், பாப்பம்மாளின் இறப்பிற்கு பின்பு சங்கரும், அவருடைய வாரிசுளும் அனுபவித்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ஏனெனில் அப்போது பாகம் ஏதும் பிரிக்கப்படவில்லை.

12. பாப்பம்மாள் இறப்பிற்கு பின்பு சங்கர் மொத்த நிலத்திற்கும் பட்டா மாறுதல் செய்து வரி வகையறா செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, அச்சொத்தில் என் அம்மா தெய்வானைக்கும் கூட்டு பாத்தியம் உள்ளது.

13. சங்கர் இறந்து சுமார் 35 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல, அதற்கு குறைவாக இருக்கும். சங்கர் பெயரில் இருக்கும் சொத்தை அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அவர்களோடு சேர்ந்து நாங்களும் கூட்டு அனுபவத்தில் உள்ளோம். சங்கரின் வாரிசுகள் தான் இவ்வழக்கின் வாதிகளாக உள்ளனர் என்றால் சரிதான். சங்கரின் வாரிசுகளில் ஒருவரான கந்தசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். கந்தசாமியின் வாரிசுகள் இவ்வழக்கில் 7 முதல் 11 வாதிகளாக உள்ளனர் என்றால் சரிதான்.

14. தாவா சொத்தில் 60 ஆண்டுகளுக்கு மேலாக பங்கோ, பாத்தியமோ எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருவதற்கான எனது தாயாரின் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

15. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**